**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.274/15**

2023-ம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.சம்மந்தன், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.சம்மந்தன், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.செல்லபெருமாள் |
| கிராமம் | - வடபூண்டிபட்டு |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

17.03.2023

வா.சா.1

1முதல் 3 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

முதலில் நான் இவ்வழக்கை ஒரே ஒரு சொத்து பாகம் கோரிதான் தாக்கல் செய்தேன். அதன் சர்வே எண்.149/6-ல் 36 செண்ட்டில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தேன். தற்போது தாவா சொத்து மொத்தம் 25 அயிட்ட சொத்தாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 25 அயிட்ட சொத்தில் 2 முதல் 20 வரையான அயிட்ட சொத்துக்கள் குறித்து வழக்கில் சேர்க்கப்படவேண்டும் என்று கோரி 1 முதல் பிரதிவாதிகள் மனுதாக்கல் செய்து அதன்பேரில் தாவா திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 21 முதல் 25 வரையான அயிட்ட சொத்துக்களை இவ்வழக்கில் கூடுதலாக சேர்க்கவேண்டும் என்று நான் மனுதாக்கல் செய்து அதன்பேரில் தாவா திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2) அயிட்டம் 1ஆன சர்வே எண்.146/1 எனது தாயார் சிவகாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்துதான். இந்த சொத்து குறித்து எனது தாயார் என் பெயரிலும் 1, 2 பிரதிவாதிகளான கணபதி, சேகர் பெயரிலும் பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார். என் தாயார் இறந்த பிறகு மேற்படி உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது. அந்த உயில் ஆவணம்தான் என் தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே என் தாயார் உயில் எழுதி வைத்துவிட்ட பிறகு என் பாக பிரிவினையில் மேற்படி சொத்தை சேர்த்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் தங்களது ஆள்பலத்தை பயன்படுத்தி அவர்கள் பெயரில் மட்டுமே பட்டா பெற்றுக்கொள்ள முயற்சி செய்ததால் அதை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன். அந்த சொத்தில் எனக்கும் பாக உரிமையுள்ளது. நான் தாவாவில் தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரனங்கள் குறித்த விவரங்கள் எனக்கு 75 சதவீதம் தெரியும்.

3) தாவா 2 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் என் தகப்பனார் செல்லபெருமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் அது குறித்து ஏற்கனவே தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டார். 1993ல் பாச்சம்மாள், கணபதி, சேகர் ஆகியோர்களுக்கு தானசெட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார். சர்வே எண்.127/10பி கணபதி, சேகர் ஆகியோர்களுக்கு கூர்சீட்டு முன்னிலையில் எனது தாயார் எழுதி வைத்துள்ளார். தாவா அயிட்ட எண்.2 முதல் 7 வரையனா சொத்துக்கள் என் தகப்பனார் செல்லபெருமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும்,. அதில் 1 முதல் 10 வரையான பிரதிவாதிகளுக்கு 1/6 பாக உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1/3 பாக உரிமை மட்டுமே உள்ளது. 8வது அயிட்ட சொத்து எனது தாயார் பாச்சம்மாள் கிரையம் பெற்று 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா 9வது அயிட்ட சொத்தில் உள்ள

கிணற்றில் 1/6 பாகம் பிரதிவாதிகளுக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1/3 பாக உரிமைதான் உள்ளது அந்த சொத்து குறித்து ஏற்கனவே அசல் வழக்கு எண்.107/16 தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

4) 10வது அயிட்ட சொத்து எனது தாயார் மாரிமுத்து என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். 1993ம் வருடம் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் தேதி மற்றும் மாதம் எனக்கு நினைவு இல்லை. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா 11வது அயிட்ட சொத்து கிராம நத்த சொத்து. அந்த வீட்டுமனை விஸ்தீரனம் 435 சதுர மீட்டர். வீடு இடிந்து காலி மனையாகதான் உள்ளது. அந்த சொத்து எனது பாட்டனார் ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் எனது பூர்வீக சொத்து என்று சொன்னால் சரியல்ல. நான் மனு எழுதிகொடுத்து அதற்கான பட்டா பெற்றேன். மேற்படி சொத்து நத்தம் புறம்போக்கு நிலமாக இருந்து அனுபவத்தின்பேரில் எனக்கு பட்டா வழங்கப்பட்டது. மேற்படி சொத்து எனக்கு நமுனா வழங்கப்பட்டது குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு சிட்டா நகல் வழங்கப்பட்டது அதை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றும், மேற்படி சொத்து எனது குடும்ப பூர்வீக சொத்து என்றும் தற்போது அதற்கு வழங்கப்பட்ட சிட்டாவைதான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சொத்து பொறுத்தவரை எனக்கு கூர்சீட்டு முன்னிலைக்கு பாகமாக கிடைக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல.

5) மேற்படி சொத்தை நான் திருமணம் செய்துகொண்ட பிறகு என் வீட்டை விட்டு வெளியேறியதால் 1, 2 பிரதிவாதிகள் அவர்களின் திருமண செலவிற்காக வேண்டி மேற்படி சொத்தை நான் அவர்களுக்கு கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பதிவு செய்யப்படாத ஒரு ஆவணத்தை 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்துவிட்டு பின்னர் மேற்படி சொத்து குறித்து என் பெயரில் பட்டா

பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 12 வது அயிட்ட சொத்து எனது தகப்பனார் இறந்த பிறகு கூட்டு குடும்பமாக நாங்கள் இருந்ததால் கூட்டு குடும்பமாக கிரையம் பெற்ற சொத்து என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சாட்சியானவர் முறையாக பதில் அளிக்காமல் வழக்கறிஞரிடம் எதிர்கேள்வி கேட்டுக்கொண்டு இருப்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் அழைத்துவர வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது. சாட்சி பிரமாணத்தின்பேரில் செய்யப்படும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

6) தாவா 12வது அயிட்ட சொத்து என் பெயரில் கிரையம் பெறப்பட்டதால் பிரதிவாதிகளுக்கு அதில் 1/6 பாக உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதில் யாருக்கும் உரிமையில்லை. தாவா 13 முதல் 20 அயிட்ட சொத்துக்கள் எனது தகப்பனார் செல்லபெருமாளின் சொத்துக்கள் என்றும் அவர் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால் பிரதிவாதிகள் அனைவருக்கும் அதில் பாக உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் மூவருக்கு மட்டும்தான் அதில் பாக உரிமை உள்ளது. தாவா 21 வது அயிட்ட சொத்து என் தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்து அதிலும் எங்கள் மூவருக்கும்தான் பாக உரிமை உள்ளது. அதேபோல் 22வது அயிட்ட சொத்து என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே மாதவன் என்பவருக்கு கிரையம் கொடுத்த சொத்து என்று சொன்னால் அது தவறாக கிரையம் கொடுக்கப்பட்ட சொத்து. மேற்படி சொத்தை எனது தகப்பனார் மாதவன் என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக நான் ஏற்கனவே மற்றொரு பாக வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 23, 24 அயிட்ட சொத்து என் தாயார் 1ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும் மேற்படி சொத்தில் பாக உரிமை கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 23வது அயிட்ட சொத்து பூர்வீக சொத்து 24வது அயிட்ட சொத்துதான் என் தாயார் கிரையம் பெற்ற சொத்து.

7) எனது தாயார் எனக்கும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கும் தான செட்டில்மெண்ட் பூர்வீக சொத்து குறித்து எழுதி வைத்துள்ளார் அந்த தான செட்டில்மெண்ட் பத்திரங்களை நான் ஒப்புக்கொள்கிறேன். மேற்படி 23 மற்றும் 24 சொத்துக்கள் குறித்து தானசெட்டில்மெண்டில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா 25வது அயிட்ட சொத்து என் தாயார் பாக்கியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா பாக்கியம்மாளுக்கு எழுதிவைத்த பூர்வீக சொத்துதான் அது. மேற்படி சொத்தை பாக்கியலட்சுமி என் தாயாருக்கு செட்டில்மெண்ட்தான் எழுதிவைத்துள்ளார். அந்த சொத்து குறித்து என் தாயார் 2ம் பிரதிவாதி பெயரில் உயில் எழுதி வைத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. எதிர் வழக்குரையில் பிரதிவாதிகள் இதுகுறித்து கூறியபோதுதான் எனக்கு தெரியவந்தது. என் தாயர் 30.06.2015ல் தான் காலமானார். என் தாயார் காலமான பிறகு 2ம் பிரதிவாதி பெயரில் எழுதிவைத்த உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும் அதில் நான் பாக உரிமைகோர முடியாது என்றுசொன்னால் சரியல்ல. அது பூர்வீக சொத்து அதில் பாக உரிமை உள்ளது. மேற்படி சொத்தை உயிலின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்துகொண்டு அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது.

8) தாவா 21 முதல் 25 வரையான அயிட்ட சொத்துக்களில் எனக்கு பாக உரிமை எதுவும் இல்லையென்றும் பிரதிவாதிகளின்மீது வீண் வியாஜியம் செய்யவே மேற்படி சொத்துக்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தவிர நான் தாக்கல் செய்திருந்த மற்ற 2 பாக வழக்குகள் தீர்ப்பாகிவிட்டது. இந்த வழக்குகளை நான் ஒரே வழக்காக தாக்கல் செய்திருக்கலாம் பிரதிவாதிகளை அலைகழிக்கவே தனித்தனி வழக்காக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் 11ம் பிரதிவரிதயை தரப்பினராக சேர்க்கவேண்டி

மனு தாக்கல் செய்துதான் தரப்பினராக சேர்த்துள்ளேன். அனைத்து தரப்பினரையும் வழக்கு தரப்பினராக சேர்க்க பிரதிவாதிகள் தரப்பில் மனுதாக்கல் செய்ததால்தான் நானும் மனுதாக்கல் செய்திருந்தேன். என் தகப்பனாருடன் பிறந்த சகோதரியான சரோஜா என்பவரின் மகன்தான் 11ம் பிரதிவாதி. மேற்படி எனது தகப்பனார் உடன் பிறந்தவர்களுடன் ஏற்கனவே பாக பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் என் தகப்பனாரின் சகோதரியின் மகனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. அவர்களுடைய சொத்தை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். பிரதிவாதிகளுக்கு தாவா 1 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் மற்றும் 9, 10வது அயிட்ட சொத்துக்களில் 1/6 பாக உரிமை உள்ளது என்றும் மற்ற அயிட்ட சொத்துக்கள் குறித்து இத்தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1/3 பாக உரிமைதான் எங்களுக்கு உள்ளது.

4 முதல் 10 வரையான பிரதிவாதிகள் தரப்பில் 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்பதாக கற்றறிந்த வழக்கறிஞர் கூறியுள்ளார்.

11ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.